டும் வடபா லந்தர், தழலாதி மூன்றல்லாத் திரையந்துங் குளங் கூடபஞ் சமைத்தான் ருனே. (௨0)

வேறு.

புரிக்கு மப்பாற் பொழிற்புடையின் வடபா லிருப்பார் புரி சமைக்கு, மரத்தச் சர்களு மதன்வடபா லிருது வண்ணார் வசி த்திடுவ, ரிருப்பார் மற்றை யிழிகுலத்தா ரிதற்கு வடபா லிப்பு ரியின், மரித்தார்க் கெல்லாம் பொழிற்புடையீ சான திக்கின் மயானந்தான். (௨௧)

புரிக்கப் புறத்துப் பொழிலுக்குப் பூர்வங் குரோசத் தினுக் கப்பா, லிருப்பார் புலையர் முற்பகலி னியங்கிப் புகுவ ரங் காடி, பிரித்தப் பொழுதே மீண்டிடுவர் பிறகூ றடையார் பிழைத்தடையிற், புரிக்குந் தீங்காம் புகலெ * ன்றே நிறுத்தி யிடுக பூபதிதான். (௨௨)

மன்னன் மனுநூன் முறையாலே நிறுத்திற் றரையின் மனி தரைத்தா, னின்ன லடையா னிம்மையினு மிட்ட மான பல ம்பெறுவன், றன்னை வெல்வார் தமையின்றித் தானே யாள் வான் றரைமுழுதும், பின்ன மறவே யுயிர்தோறு நிற்பா னரு ளும் பெறுவானே. (௨௩)

வேறு.

கண்டிமையோர் கம்மியன்செய் பணதியெல்லாங் கவுதம னருண் காதல் கூர்ந்தே, யண்டர்பிரா னடியிணையிற் பணிந் தமல னினிதின்னை யருச்சித் தேத்த, வெண்டிகழுந் துணர்புதி ன்மர் நடம்புரியுங் கன்னியர்க ளொழுவர் வேண்டு, மண்டல த்தென் றமலனருள் பெற்றவரைத் தருப்பைதனில் வகுத் தான வாக்கால். (௨௪)

* புகல் - புகற்க.

